# பிரமிட் திட்டங்கள்

## 01) பிரமிட் திட்டங்கள் என்பது என்ன?

கீழே உள்ள கதையை வாசித்து பிரமிட் திட்டங்களைப் பற்றி அறிந்துகொள்ளுங்கள். அறிந்து கொண்டதன் பின்னர் அவற்றிலிருந்து எவ்வாறு விலகியிருக்கலாம் என்பது பற்றி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இயலுமான வகையில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சொல்லிக்கொடுங்கள்.

ஒருநாள் பாடசாலை இடைவேளை நேரத்தில் கமல் மற்றும் சமன் ஆகிய இரு மாணவர்கள் பேசிக்கொண்டிருந்த விடயங்களை அதிபரான திரு. சமரவீர அவர்களின் காதுக்கு எட்டியது.

கமல் : பணம் உழைப்பதற்கு நல்ல வழியொன்று கிடைத்துவிட்டது.

சமன் : அது என்ன?

கமல் : ரூபா 10,000 கொடுத்து அவர்களுடைய வியாபாரத்தில் சேர்ந்துகொண்டால் அடுத்த மாதத்திலிருந்து ரூபா 2,000 பெறலாம் என சுராஜ் என்னிடம் சொன்னார். அவ்வாறு பெற வேண்டுமானால் தலா ரூபா 10,000 இனை தரக்கூடிய இன்னும் இருவரைத் தேடித்தர வேண்டும் எனவும் கூறினார்.

சமன் : அப்படியென்றால் நீங்கள் அந்த வேலையில் சேர்ந்துகொண்டீர்களா?

கமல் : ஆம், நான் ரூபா10,000 ஐ கொடுத்தேன். கசுனிடமும் ரூபா 10,000 கொடுக்குமாறு கூறி உடன்படவைத்துவிட்டேன். நீங்களும் ரூபா 10,000 கொடுத்து இந்த வேலையில் சேர்ந்துகொள்ளுங்கள் என்பதைத்தான் உங்களிடம் கூற இருந்தேன். அப்பொழுதுதான் எனக்கும் அடுத்த மாதத்திலிருந்து ரூபா 2,000 கிடைக்கும்.

சமன் : அவ்வாறு இணைந்துகொண்டால் எனக்கு என்ன கிடைக்கும்?

கமல் : நீங்களும் ரூபா 10,000 தரக்கூடிய இருவரை சேர்த்துக்கொண்டால் உங்களுக்கும் அடுத்த மாதத்திலிருந்து ரூபா 2,000 கிடைக்கும்.

இந்த உரையாடலை கேட்டுக்கொண்டிருந்த அதிபர் திரு. சமரவீர அவர்கள் கமலையும் சமனையும் அலுவலக அறைக்கு அழைத்துச்சென்று பின்வருமாறு எச்சரிக்கை வழங்கினார்.

அதிபர் : இப்பொழுது நீங்கள் இருவரும் தலா ரூபா 10,000 கொடுத்து வியாபாரத்தில் சேர்ந்து இன்னும் இருவரைத் தேடிக்கொடுத்து ஒவ்வொரு மாதமும் ரூபா 2,000 பெற எதிர்பார்க்கின்றீர்கள், அப்படித்தானே?

கமல் மற்றும் சமன் : ஆம் சேர்.

அதிபர் : எங்கிருந்து நீங்கள் இருவரும் பணத்தை பெற்றுக்கொண்டீர்கள்?

கமல் : நண்பர் ஒருவரிடமிருந்து கடனாகப் பெற்றேன்.

அதிபர் : பணத்தைக் கொடுத்து நீங்கள் முதலில் வியாபாரத்தில் சேர்ந்து அதன்பின்னர் நீங்கள் நன்மையடைவதற்கு இன்னும் சிலரைச் சேர்த்துக்கொள்ளுமாறு யாராவது உங்களிடம் கூறினால், நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளுங்கள் பிள்ளைகளே, அது ஒரு பிரமிட் திட்டமாகும். அதுபோலவே பின்னர் சேர்ந்துகொள்பவர்களின் பணத்தின் மூலம் தான் முதலில் சேர்ந்தவர்களுக்கு பணம் வழங்கப்படும். யாரும் இந்த வியாபாரத்தில் சேராவிட்டால் என்ன நடக்கும் என்று தெரியுமா? இந்த வியாபாரம் முறிவடைந்தால் நீங்கள் போட்ட பணத்தையும் இழக்க வேண்டி ஏற்படும். இப்போது கமலைப் போன்று யாராவது கடன்பெற்று இந்த வியாபாரத்தில் சேர்ந்திருந்தால் எடுத்த கடனையும் செலுத்த முடியாமல் போய்விடும். மீண்டும் இன்னொருவரிடம் கடன்பெற முடியாத நிலையும் ஏற்படும். இவ்வாறான வியாபாரத்தில் எப்படியாவது சேர்ந்து அகப்பட்டுக்கொண்டால் நீதிமன்றத்திற்கு பல தடவை சென்று தண்டப்பணத்தையும் செலுத்தி இறுதியாக சிறைக்குச் செல்ல வேண்டிய நிலை தான் ஏற்படும். அதனால் இந்த வியாபாரத்திலிருந்து நீங்கள் உடனடியாக விலகிக்கொள்ள வேண்டும். அதுபோல உங்களுக்கு தெரிந்தவர்கள் யாராவது இத்திட்டத்தில் சேர்ந்திருந்தால் அவர்களையும் விலகச்சொல்லுங்கள். இல்லாவிட்டால் சிறைக்குச்சென்று தண்டனையைப் பெற நேரிடும். சொல்வதைக் கேட்காமல் இத்திட்டத்தில் இணைந்து, பணத்தையும் இழந்து நாட்டையும் வீழ்ச்சிக்கு இட்டுச்சென்றுவிடாதீர்கள். அல்பேனியா நாடும் அவ்வாறு தான் வீழ்ச்சியடைந்தது. இது தொடர்பில் வாசித்து அறிந்துக்கொள்ளுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன்செய்து (Link) இணைப்பினூடாக காணொளியைப் பார்வையிடவும்.

## 02) பிரமிட் திட்டங்கள் சட்டத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளனவா?

ஆம். பிரமிட் திட்டங்களில் ஏதேனும் வகையில் இணைந்துகொள்ளுதல் சட்டத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளதுடன், சிறைத்தண்டனை அல்லது தண்டப்பணத்தைச் செலுத்தவேண்டி ஏற்படல் அல்லது இவ்இரண்டு தண்டனைகளுக்கும் ஆளாதல் வேண்டும்.

## 03) பிரமிட் திட்டங்களில் ஆட்களை இணைப்பதற்கு எவ்வாறான உத்திகள் கையாளப்படுகின்றன?

(i) பொருட்களை விற்பனைசெய்வதாக பணத்தை அறவிடல். (உ-ம்:- சூரிய சக்திப் பலகம், சுகாதார உபகரணங்கள்)

(ii) மறைகுறி நாணயத்தில் (கிறிப்டோ நாணயத்தில்) முதலீடுசெய்தல் எனும் போர்வையில் போலியாக பணத்தை அறவிடல்.

(iii) தொழில் அல்லது பயிற்சி வழங்குதல் எனும் போர்வையில் பணத்தை அறவிடல்.

(iv) கற்கைநெறிகளை வழங்குதல் எனும் போர்வையில் பணத்தை அறவிடல்.

(v) உடனடியானதும் கவர்ச்சிகரமானதுமான நன்மைகளை வழங்குவதாக வாக்குறுதியளித்தல்.

(vi) வியாபார அறிவித்தல்களை பார்வையிடல் போன்ற பயனற்ற செயற்பாடுகளைத் தூண்டி பணத்தை அறவிடல்.

(vii) விவசாய முதலீடுகளைப் பேணுதல் எனும் போர்வையில் பணத்தை அறவிடல் (உ-ம்:- காணிகள், பல்வேறுபட்ட மர வகைகள்)

(viii) பல்வேறு நபர்களைப் பயன்படுத்தி போலியான கதைகள் ஊடாக விரைவாக செல்வந்தராகுவதற்குரிய வழிகாட்டல்களை வழங்குதல் (உ-ம்:- பிரமிட் திட்டங்கள் ஊடாக வாகனங்கள் மற்றும் வீடுகளை விரைவாக கொள்வனவு செய்ததாக போலியான கதைகளை கூறுதல்.)

(ix) பிரமிட் திட்டங்களை ஊக்குவிப்பதற்கு பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரபலமான நபர்களைப் பயன்படுத்தல் (உ-ம்:- விளையாட்டு வீரர்கள், நடிகர்கள் மற்றும் நடிகைகள்)

## 04) பிரமிட் திட்டங்களில் இணைந்துகொள்வதனால் ஏற்படும் பிரதிகூலங்கள் எவை?

(i) முதலீடு செய்த பணத்தை இழந்து, வழங்கப்பட்ட சகல கவர்ச்சிகரமான வாக்குறுதிகளினாலும் ஏமாற்றமடைதல்.

(ii) சமூகத் தொடர்புகள் வீழ்ச்சியடைதல் (இவ்வியாபாரத்தில் பெரும்பாலானோர் தங்களது நெருங்கிய உறவினர்களை இணைத்துக்கொள்வதனால்)

(iii) சட்ட ரீதியான நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடலும் தண்டனை கிடைத்தலும்

(iv) கடனைச் செலுத்த முடியாமை மற்றும் மீண்டும் கடனைப் பெற்றுக்கொள்ள முடியாமை.

(v) இத்தகைய பயனற்ற செயற்பாடுகளில் நாட்டின் பிரசைகள் ஈடுபடுவதனால் அவர்களின் சொத்துக்களை இழந்து, வறுமை நிலை அதிகரித்து, நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரமும் அதே போன்று நிதியியல் முறைமையும் வீழ்ச்சியடைதல்.

## 05) இத்தகைய சட்டவிரோத திட்டங்களிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு நீங்கள் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் யாவை?

(i) விழிப்பூட்டல் (மத்திய வங்கி போன்ற அதிகாரமளிக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்களால் இவ்வாறான தடைசெய்யப்பட்ட திட்டங்கள் தொடர்பாக முன்னெடுக்கப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றல்)

(ii) ஏனையவர்களை விழிப்புணர்வூட்டுதல்

(iii) சரியான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல் (பணத்தை முதலீடுசெய்வதற்கு முன்னர் அருகிலுள்ள வங்கிக்குச்சென்று ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல் போன்றன.)

(iv) இத்தகைய தடைசெய்யப்பட்ட வியாபாரம் தொடர்பாக தகவல் கிடைத்தால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அத்துடன்/ அல்லது மத்திய வங்கியில் முறைப்பாடுசெய்தல்.

<u>விசேட குறிப்பு</u>

மேற்படி விடயம் தொடர்பாக மத்திய வங்கியில் முறைப்பாடு செய்வதற்கும் உங்களது பாடசாலையில் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள், பிரமிட் திட்டங்கள், நிதியியல் அறிவு போன்ற துறைகள் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை இருப்பின், இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களத்தை தொடர்புகொண்டு மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும்.

பணிப்பாளர், நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.

fcrd@cbsl.lk 0112477744

0765780000 HOTLINE 1935